©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 13] சென்னை, புதன்கிழமை, ஏப்ரல் 7, 2010
பங்குனி 24, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி VI—பிரிவு 1 இன் இணைப்பு

### துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

---

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 137(2)-ன்கீழ் ஏ.எச்.டி./டி.பி. 80 அத்திப்பாடி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம் கலைத்தல் மற்றும் கலைப்பு அலுவலர் நியமித்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண் 1111/அ2/2010.)*

ஏ.எச்.டி./டி.பி.80 அத்திப்பாடி ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கத்தினை 1983ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 137(2)(பி)—ன்கீழ் கலைத்து அனைத்து செயல்பாடுகளையும் நிறுத்தி ஆணையிடப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 138(1)—ன்கீழ் கலைக்கப்பட்ட இச்சங்கத்தின் பொறுப்புகளையும் ஆஸ்திகளையும் மேற்கொள்ளும் பொருட்டு உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, கிருஷ்ணகிரி கலைப்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தர்மபுரி—1,
2010 மார்ச் 9.

**ஆர். இராகவன்,**
*மண்டல இணை இயக்குநர்.*

**1975ஆம் வருட தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டத்தின்கீழ் செயல்படாத சங்கத்தை பதிவேட்டில் இருந்து பதிவு நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

**ஆதி ஆந்திரா அருந்ததி நலச் சங்கம், நசரத்புரம்.**

*(17416/ஏ1/2009.)*

1975ஆம் வருட தமிழ்நாடு சங்கப் பதிவுச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 27/75) பிரிவு 44(2)—ன்கீழ் அளிக்கப்படும் அறிவிப்பானது பிரிவு 44(1)—ன்கீழ் மேற்படி சங்கம், ஆதி ஆந்திரா அருந்ததி நலச் சங்கம், நசரத்புரம் பதிவு எண் 546/06, நெ. 46, ராமர் கோயில் தெரு, செயிண்ட் தாமஸ் மவுண்ட், நசரத்புரம், சென்னை—16 செயல்படுகிறதா என இவ்வலுவலக கடித எண். 19540/ஏ1/09, நாள் 28—12—2009—ன்படி கடிதம் அனுப்பப்பட்டு எவ்வித பதிலும் பெறப்படவில்லை. சங்கப் பதிவேடுகளை ஆய்வுக்கு தாக்கல் செய்யக் கோரியும் தாக்கல் செய்ய முன்வரவில்லை. எனவே இந்த அறிவிப்பு **"தமிழ்நாடு அரசிதழில்"** பிரசுரமாகும் நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் தக்க விளக்கம் மேற்படி சங்கத்திடமிருந்து பெறப்படவில்லையாயின், மேற்படி சங்கத்தின் பெயர் சங்கங்கள் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும் என அறிவிக்கப்படுகிறது.

தென்சென்னை,
சென்னை—15,
2010 மார்ச் 10.

**அ.ப. இராசு,**
*சங்கங்களின் பதிவாளர்.*

---

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—VI-1 Sup. (13)

Verified @ RealEstate ™